FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

ஊ.த.க.பிரிவு

C 8301684

1. District : **நாகப்பட்டினம்** PS: **நாகப்பட்டினம்** Year: **2026** FIR No.: **7/2026** Date: **11.08.2026**
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018**

(ii) .Act சட்டம்: **IPC** Sections பிரிவுகள்: **120 B, 167, 465, 468 & 471 IPC**

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : **24.08.2021** Date to : **11.10.2021**
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : - Time to : -
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : **11.08.2026** Time : **15.00 hrs**
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) **11.08.2026** Time : **15.00 hrs**
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : **முதல் நிலை விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **12 கி.மீ. மேற்கு, நாகப்பட்டினம் மாவட்டம்**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : **கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகம்**
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **க.இமயவரம்பன்** (b) Father's/ Husband's Name : **கணேசன்,**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : **55/2026** (d) Nationality : **இந்தியர்** (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : **துணைக் காவல் கண்காணிப்பாளர்,** (g) Address : **ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்.**
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு.மணிவேலன், முன்னாள் வருவாய் கோட்டாட்சியர், நாகப்பட்டினம், **(2) திரு.S.மாரிமுத்து,** முன்னாள் வட்டாட்சியர், கீழ்வேளூர் வட்டம், **(3) திருமதி.M.உமாகௌரி,** முன்னாள் துணை வட்டாட்சியர், கீழ்வேளூர் வட்டம், **(4) திருமதி.A.சசிகலா,** முதுநிலை வருவாய் ஆய்வாளர், கீழ்வேளூர் வட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முதல் நிலை விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் கோகூர் உள்ளிட்ட 19 கிராமங்களில் காலியாக இருந்த கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு அரசு விதிமுறைகள் மற்றும் அரசாணைகளுக்கு முரனாக தகுயில்லாத 19 நபர்களை தேர்ந்தெடுத்து, கிராம உதவியாளர்கள் தேர்வு நடவடிக்கைகளின் போது மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறாமலும், தனிநபர் மூலம் லஞ்சமாக பணம் பெற்றுகொண்டு 19 தகுதியில்லாத நபர்களை தேர்ந்தெடுத்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்தில் வெளியிடாமலும் கடந்த 11.10.2021 அன்று பணி நியமனம் ஆணை அளித்து கிராம உதவியாளர்களை பணி நியமனம் செய்தது தொடர்பாக அப்போதைய நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் புகார் ந.க.எண்.13548/2021/A5, நாள் 03.04.2023-ன்படி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் PE.26/2025/REV/NP, நாள் 28.02.2025-ன்படி முதல்நிலை விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை சமர்ப்பித்து அதனடிப்படையில் அரசு கடிதம் Government Letter (2D) No.540, Revenue and Disaster Management Department, dated 17.06.2026 ன் படி குற்ற அலுவலர்கள் மீது வழக்கு தொடர வழங்கிய அனுமதி ஆணை மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரக குறிப்பாணை PE.26/2025/REV/NP Dated:29.06.2026-இன்படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:

(தனி தாள்கள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/8/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகை பதிவு

11/8/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11/8/2026

Name: பெயர் கே. திலகவதி பன்
Rank: நிலை சார்பு ஆய்வாளர்
கோ.கூ.கா.நி
நாகப்பட்டினம்.

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

1. திரு.மணிவேலன், 62/2025 த/பெ.V.ராமசாமி, தற்போது 31.01.2023 அன்று பணி ஓய்வில் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் உள்ளவர் நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியராக கடந்த 02.03.2021 முதல் 28.02.2022 வரை பணிபுரிந்துள்ளார்.

2. திரு.S.மாரிமுத்து, 52/2025 த/பெ.K.சுப்பையன், தனி வட்டாட்சியர் / துணை மேலாளர், TASMAC திருப்புவனம், தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டாட்சியராக கடந்த 08.02.2021 முதல் 13.10.2021 வரை பணிபுரிந்துள்ளார்.

3. திருமதி.M.உமாகௌரி, 54/2025 த/பெ.N.மருதப்பன், கண்காணிப்பாளர் 'B' Section, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக கடந்த 27.07.2021 முதல் 11.10.2021 வரை பணிபுரிந்துள்ளார்.

4. திருமதி.A.சசிகலா, 34/2025 த/பெ.G.அன்பழகன், உதவியாளர் 'D2' Section, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக கடந்த 13.11.2019 முதல் 28.09.2021 வரை பணிபுரிந்துள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் கோகூர் உள்ளிட்ட 19 கிராமங்களில் காலியாக இருந்த கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு கிராம உதவியாளர்கள் தேர்வு நடவடிக்கை காலத்தில் பணிபுரிந்த மேலே கண்ட எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்புச் (Amendment) சட்டம் 2018 ஆகியவற்றின் சட்டப்பிரிவு 2(c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் கிராம உதவியாளர்கள் காலி பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக தமிழக அரசால் Revenue & Disaster Management Department, Services Wing, [Ser 8(1)] Section G.O.(Ms) No.574 Dated 17.10.2020-ன்படி வழிகாட்டு நெறிமுறைகளை அரசாணையாக வெளியிட்டுள்ளது. கிராம உதவியாளர்கள் பணியிடங்களை நிரப்புவது தொடர்பான தேர்வு பணியில் ஈடுபடும் வட்டாட்சியர் வேலைவாய்ப்பு தொடர்பாக அந்த வட்டார நாளிதழ்களில் அறிவிப்புகள் வெளியிட்டு விண்ணப்பங்களை பெற்று தேர்வுகள் மற்றும் நேர்முகத்தேர்வு நடத்தி பணிஆணை வழங்கும் வரையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் மாவட்ட ஆட்சியரிடம் கட்டாயம் ஒப்புதல் பெறவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்வு நடவடிக்கைகள் அனைத்தும் வெளிப்படைத் தன்மையோடு இருக்கவேண்டும் என்றும், தேர்வு முடிவுகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்தில் வெளியிடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், தேர்வு நடவடிக்கைகள் அனைத்தும் ஒருதலை பட்சமாகவோ அல்லது எவருக்கேனும் சாதகமாகவோ இல்லாமல் நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி படுத்த வேண்டும். மேலும் இந்த அரசாணையில் குறிப்பிட்ட கிராம பணியாளர்கள் தேர்வின்போது கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளை வலியுறுத்தி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலக கடிதம் Lr.No.R.A.2(2)/13808/

2015, Dated 07.11.2020-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் வருவாய் (பணி-8(1)) துறை அரசு ஆணை (நிலை) எண்.155 நாள் 26.3.2010 மற்றும் கூடுதல் தலைமைச்செயலளர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் அலுவலக ந.க.எண்.வ.நி.2(2)/35730/2020, நாள் 9.12.2020-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.375 Revenue [Ser 8(1)] Department, dated 19.10.2015-ன்படி கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்பும்போது அந்த கிராமத்தையே இருப்பிடமாக கொண்ட தகுதியான நபரையே தேர்ந்தெடுக்கவேண்டும். அந்த கிராமத்தில் தகுதியான நபர்கள் கிடைக்காத பட்சத்தில், அந்த கிராமம் உள்ளடங்கிய தாலுக்கா எல்லையில் வசிக்கும் நபர்களை தேர்ந்தெடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை நிலை எண்.521 Revenue (Ser.VII(2) Department நாள்.17.06.1998-ன்படி கிராம உதவியாளர்கள் பணிக்கு அந்தெந்த கிராமத்தையே சொந்த ஊராக கொண்ட நபர்களையே பணி நியமனம் செய்யவேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளது. மேலும் காலியாக உள்ள கிராம உதவியாளர்கள் பணியிடத்தை நிரப்ப இனசுழற்சி அடிப்படையில் நிரப்பவேண்டும் என்று Personnel and Administrative Reaforms (S) Department G.O.(M.s).No.55, Dated. 08.04.2010-ல் கிராம உதவியாளர் பணியிடங்கள் நிரப்பும்போது மேற்கண்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழிகாட்டுதல்கள் படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் அடங்கிய கோகூர், அகரகடம்பனூர், வடக்குவெளி, திருமணங்குடி, அத்திப்புலியூர், குருகத்தி, திருகண்ணங்குடி அகரம், பட்டமங்கலம், கூத்தூர், செருநல்லூர், வடகாலத்தூர், வெண்மணி, மணலூர், ஆந்தக்குடி, சிகார், கூரத்தங்குடி, கோவில்கண்ணாப்பூர், மாணலூர், கிள்ளுக்குடி ஆகிய கிராமங்களில் காலியாக இருந்த கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு (1) திரு.S.மாரிமுத்து, முன்னாள் வட்டாட்சியர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். (2) திருமதி.M.உமாகௌரி, முன்னாள்: துணை வட்டாட்சியர் கீழ்வேளூர் வட்டம், (3) திருமதி.A.சசிகலா, முன்னாள் முதுநிலை வருவாய் ஆய்வாளர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். ஆகியோர்கள் கிராம நிர்வாக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் ந.க.18813/2020/அ5, நாள்.31.12.2020-ன்படி நாகப்பட்டினம் முன்னாள் படைவீரர்நல அலுவலகம், வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றிலிருந்து தகுதியான பட்டியலைப்பெற்றும், குறிப்பிட்ட நபர்களிடமிருந்து கையூட்டு பெற்று அவர்களை தேர்தெடுக்கவேண்டும் என்ற நோக்குடன் எந்தெந்த கிராமங்களுக்கு கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது என்ற விபரத்தை குறிப்பிடாமல் இவ்வேலைவாய்ப்பு தொடர்பாக தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்தும், அது தொடர்பான விண்ணப்பங்களை பெற்றும், 24.08.2021 முதல் 09.09.2021 வரை அத்தேர்வு பணிக்காக கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்களை கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.148/2021/அ2-ன்படி செயல்முறை ஆணை பிறப்பித்து அவர்களுக்கு பணி நியமனம் செய்துள்ளார்கள். அதன்மூலம் 1498 விண்ணப்பங்களை பெற்றும், அவற்றை பரிசீலனை செய்து 563 நபர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வில் கலந்துகொள்ள அழைப்பாணை அனுப்பியும்,

அவர்களில் 549 நபர்களுக்கு மட்டும் தேர்வு பட்டியல் மற்றும் மதிப்பெண் பட்டியல் தயார்செய்தும், இந்நடவடிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறாமலும், விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களில் என்னக்காரணத்திற்காக மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது என்பதை குறிப்பிடாமலும், 19 நபர்களை தேர்வு செய்து கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலக ந.க.1048/2021/அ2, நாள்.08.10.2021-ன்படி தேர்வுப் பட்டியல் தயார்செய்தும், அதில் அனைவரும் கையொப்பமிட்டும், அந்த பட்டியலை அப்போதைய நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் மணிவேலன் த/பெ.V.ராமசாமி என்பவரின் ஒப்புதலுக்கு அனுப்பி உள்ளார்கள். அவர் தேர்வுப்பட்டியலை உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே சரிபார்க்காமல் நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ந.க.3646/2021/அ, நாள்.11.10.2021-ன்படி ஒப்புதல் அளித்துள்ளார்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உதவியாளர் தேர்வு நடவடிக்கைகளில் 19 கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் தொடர்பான நாளிதழ் விளம்பரத்தில் எந்தெந்த கிராமங்களுக்கு எந்த இனச்சுழற்சி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடாமலும், ஆங்கிலத்தில் வாசித்தல் தேர்வு நடத்தாமலும், அதற்கான 5 மதிப்பெண்கள் வழங்காமலும், தமிழ் எழுத்து தேர்விற்கு அரசாணைப்படி 15 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டிருந்தும், 10 மதிப்பெண்களுக்கு மட்டுமே தேர்வு நடத்தியும், ஆங்கிலத்தில் எழுத்து தேர்வு நடத்தாமலும், அதற்கான 15 மதிப்பெண்கள் வழங்காமலும், கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு 25 மதிப்பெண்களும், அதே தாலுக்காவைச் சேர்ந்தவர்களுக்கு 20 மதிப்பெண்களும் வழங்கவேண்டும் என்ற விதிமுறையை கடைப்பிடிக்காமலும், இருப்பிடத்திற்கான மதிப்பெண்ணை வழங்காமலும், மூன்று நபர்கள்கொண்ட நேர்முக தேர்வுக்குழு அமைக்காமலும், நேர்முக தேர்விற்கான 15 மதிப்பெண்கள் வழங்காமலும், கிராம உதவியாளர் தேர்வின் ஒவ்வொரு நடவடிக்கையும் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெறாமலும், கிராம உதவியாளர்களின் தேர்வு முடிவுகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக இணையத்தளத்தில் வெளியிடாமலும், கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கிராம உதவியாளருக்கான பணிநியமன ஆணைகளை அஞ்சல் மூலமாக அனுப்பாமலும், மேலே குறிப்பிட்டுள்ள அரசாணை நிலை 574 இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை கடைப்பிடிக்காமலும் தேர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் நாகப்பட்டினம் வட்டத்தைச் சேர்ந்தவர்களான மாலதி என்பவரை வடக்குவெளி கிராமத்திற்கும், ஆனந்தன் என்பவரை அத்திபுலியூருக்கும், முத்துராதா என்பவரை திருக்கண்ணங்குடி அகரத்திற்கும், சூரியா என்பவரை வெண்மணி கிராமத்திற்கும், ரகுவரன் என்பவரை கூராத்தன்குடிக்கும், சிலம்பரசி என்பவரை கிள்ளுக்குடி கிராமத்திற்கும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. திருக்குவளை வட்டத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி என்பவரை மணலூர் கிராமத்திற்கும், வேதாரண்யம் வட்டத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவரை சிகார் கிராமத்திற்கும் பணிநியமனம் செய்யப்பட்டதில் அரசாணை நிலை எண்.375 Revenue [Ser 8(1)] Department, நாள்.19.10.2015 விதிமுறைகளை கடைபிடிக்கப்படாமலும் பணி நியமன ஆணைகளை வழங்கி உள்ளனர்.

குற்ற அலுவலர்கள் ஒன்றுசேர்ந்து குறிப்பிட்ட நபர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற குற்றமுறு நோக்கத்துடன் முன்கூட்டியே தீர்மானித்து கீழ்வேளூர் வட்டத்தில் கிராம உதவியாளர்கள் பணியிடம் காலியாக இருந்த கிராமத்தின் பெயர் விபரங்களை நாளிதழில் வேண்டுமென்றே மறைத்து விளம்பரம் செய்தும், விண்ணப்பித்த 1498 நபர்களில் அனைத்து சான்றுகளுடன் விண்ணப்பித்த தகுதியான நபர்களை நேர்முகத் தேர்விற்கு அழைக்காமலும், 563 நபர்களை மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைத்து அவர்களுக்கு ஆங்கிலத்தில் வாசித்தல் மற்றும் எழுத்துத் தேர்வு நடத்தாமலும், இருப்பிடத்திற்கான மதிப்பெண் வழங்காமலும், நேர்முகத் தேர்வு நடத்தாமலும், வேறு வட்டத்தைச் சேர்ந்த 7 நபர்களை கிராம உதவியாளராக தேர்வுசெய்து மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறாமலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையத்தளத்தில் வெளியிடாமலும், தேர்வுப் பற்றி அலைப்பேசியில் தெரிவித்தும், மேலே குறிப்பிட்டுள்ள அரசாணைகளின் விதிமுறைகளுக்கு விரோதமாக பணிநியமனம் செய்து உள்ளனர். மேலும் குற்ற அலுவலர்கள் குற்றமுறு நோக்கத்துடன் அனைத்து சான்றுகளுடன் விண்ணப்பித்திருந்த தகுதியான நபர்களை நேர்முகத் தேர்விற்கு அழைக்காமலும், நேர்முகத் தேர்வில் கலந்து மதிப்பெண்கள் பெற்றவர்களை தேர்வுப் பட்டியலில் சேர்க்காமலும், அவர்களின் விடைத்தாள் மற்றும் சரிபார்ப்பு பட்டியலில் மதிப்பெண்களை குறைத்தும், 549 நபர்கள் நேர்முகத்தேர்வில் கலந்துக்கொண்டிருந்த நிலையில் 212 நபர்களை மட்டும் தேர்வுப் பட்டியலிலும், 217 நபர்களை மதிப்பெண் பட்டியலிலும் சேர்த்து போலியான தேர்வுப் பட்டியல் மற்றும் மதிப்பெண் பட்டியல் தயார் செய்ததோடு, தகுதியில்லாத நபர்களுக்கு பணிநியமனம் வழங்கவேண்டும் என்ற குற்றமுறு நோக்கத்துடன் மதிப்பீட்டாளர்களால் வழங்கப்பட்ட மதிப்பெண்களை அழித்தும், திருத்தியும், அவர்களுக்கு அதிகமாக மதிப்பெண்கள் வழங்கியும், போலியான மதிப்பெண் பட்டியல்கள் தயார்செய்தும், அரசை ஏமாற்றும் நோக்கத்துடன் அந்த ஆவணங்களை உண்மையான ஆவணங்களைபோல் பாவித்தும், 19 நபர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கி ஆதாயம் அடைந்துள்ளனர்.

மேலும் கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ள 14 கிராமங்களிருந்து தகுதியான 60 நபர்கள் தக்க இனசுழற்சியின்படி அனைத்து தகுதிகளோடும் விண்ணப்பித்திருந்தும் அவர்களில் 11 நபர்களை நேர்முகத்தேர்விற்கு அழைக்காமலும் மற்ற 49 நபர்கள் நேர்முகத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களை மறைத்து போலியான தேர்வுப் பட்டியல் தயார்செய்துள்ளனர், 39 வயது 10 மாதம் நிறைவடைந்த நபருக்கும் பணி நியமனம் செய்து ஆதாயம் அடைந்துள்ளனர். குற்ற அலுவலர்கள் லஞ்சமாக பணம் பெற்றுக்கொண்டு தகுதியான நபர்களை புறக்கணித்து, போலியான ஆவணங்கள் தயார் செய்தும், மோசடியாக ஆவணங்களை திருத்தம் செய்தும், அரசை ஏமாற்றும் நோக்கத்துடன் குற்றமுறு சதி ஆலோசனை செய்தும் மேற்படி குற்றச் செயலை செய்வதற்கு உடந்தையாக இருந்தும், அதற்கு ஆதரவாக மோசடியான ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டு உண்மையான ஆவணங்களாக பாவித்து தகுதியில்லாத நபர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கியுள்ளார்கள். எனவே மேற்கண்ட எதிரிகள் (1)திரு.S.மாரிமுத்து, த/பெ. K.சுப்பையன், முன்னாள் வட்டாட்சியர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். தற்போது: TASMAC, உதவி மேலாளர், திருபுவனம், தஞ்சாவூர் மாவட்டம், (2) திருமதி.M.உமாகௌரி, D/o.N.மருதப்பன், முன்னாள்: துணை வட்டாட்சியர் கீழ்வேளூர் வட்டம், தற்போது 'B' Section கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம். (3) திருமதி.A.சசிகலா, த/பெ.G.அன்பழகன், முன்னாள்

முதுநிலை வருவாய் ஆய்வாளர், கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். தற்போது: 'D2' Section உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம். (4)திரு.மணிவேலன் த/பெ.ராமசாமி, முன்னாள் வருவாய் கோட்டாட்சியர், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகியோர்களின் செய்கை குற்ற விசாரணைக்கு உட்படுத்த போதிய முகாந்திரம் இருப்பதால், அரசு கடிதம் Government Lr.(2D) No.540, Revenue and Disaster Management Department, dated 17.06.2026 ன் படி குற்ற அலுவலர்கள் மீது வழக்கு தொடர வழங்கிய அனுமதி ஆணை மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரக குறிப்பாணை PE.26/2025/REV/NP Dated: 29.06.2026-இன்படி எதிரிகள் மீது நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7 சட்ட பிரிவுகள் 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption Act 2018 and 120 B, 167, 465, 468 & 471 IPC -ன்படி 11.08.2026 ஆம் தேதி காலை 15.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

11/8/2026

(க.இமயவரம்பன்)
காவல் துணைக்கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசலினை நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

11/8/2026

(க.இமயவரம்பன்)
காவல் துணைக்கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.